தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 27, பிரஜோற்பத்தி — திருவள்ளுவர் ஆண்டு 2023

1992 ஏப்ரல் 9, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.''

இறைவனுடைய திருவடிகளைத் தொழுது இருப்பவர்களே பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கடக்க முடியும். மற்றவர்களால் முடியாது.

1. இரங்கல் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பேரவையின் முன்னாள் சட்டமன்றப்பேரவை உறுப்பினர்களாகப் பணி ஆற்றிய திரு. நா. கிருட்டிணன் அவர்கள் 1–1–1992 அன்றும், திரு.எஸ்.பி. தங்கவேலு அவர்கள் 5-4-1992 அன்றும், திரு. ர. தியாகராசன் அவர்கள் 6–4–1992 அன்றும் மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. கிருட்டிணன் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டுவரை அன்றைய வட ஆற்காடு மாவட்டம் பேரணாம்பட்டு தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. எஸ். பி. தங்கவேலு அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறித் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. ர. தியாகராசன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றி உள்ளார்.

அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 514, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

திரு. எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) இது அவருடைய தொகுதி பற்றிய பிரச்சினை.

வினா எண். 515, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. வ. சத்திய மூர்த்தி இருக்கையில் இல்லை.

வினா எண். 516, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

516—

புதியதாக ஆரம்பப் பள்ளிகள் துவங்குதல்.

*5478—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேரன்மகாதேவி தொகுதி கடையம் ஊராட்சி ஒன்றியம் வெங்காடம்பட்டி ஊராட்சி மணல் காட்டானூரில் புதியதாக ஆரம்பப் பள்ளி துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்படி வெங்காடம்பட்டி ஊராட்சி மணல் காட்டானூரில் புதிதாக ஆரம்பப் பள்ளி துவங்குவது குறித்தக் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS